Registered as a Newspaper பக்கங்கள் 4 விலை: ரூபா 5:00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 15 ( 30 12 93 ) வியாழக்கிழமை ஓசை 315

## சுகாதார அதிகாரி பிரிவுகளுக்கு மலேரியா தடுப்பு பரவலாக்கம்

மலேரியாதடுப்பியக்க பிராந்தியபணிமனை கலைக்கப்பட்டு ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுக்கும் ஒவ்வொரு நிலையமாக அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை மலேரிய தடுப்பியக்க பிராந்திய பணிமனையின் கீழ் யாழ். மாவட்டமும் கிளிநொச்சி மாவட்டமும் உட்பட்டிருந்தது. இனி ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கும் ஒவ்வொரு நிலையமாக இது இயங்க உள்ளது. மேற்படிபணிமனையில் பணிபுரிந்த 25 ஊழியர்களும் பிரிக்கப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். (4ஆம் பக்கம் பார்க்க)

### இனப்பிரச்சினை என்பதை ஏற்று

# வடக்கு - கிழக்கு யுத்தத்திற்கு அரசு தீர்வு காணவேண்டும்!

## ஸ்ரான்லி திலகரட்னா வலியுறுத்து

(கொழும்பு)

பெரும் உயிர் இழப்புகளையும், ஆயுத இழப்புக்களையும் ஏற்படுத்திவரும் யுத்தத்தில் இருந்து நாடு விடுதலை பெறவேண்டும். இதற்கு, முதலில் வடக்கு-கிழக்கில் உள்ளது இனப்பிரச்சினை என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அதற்கான தீர்வை நோக்கி செல்லவேண்டும். இவ்வாறு கொழும்பு மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரான்லி திலகரட்னா தெரிவித்தார்.

மேலும், அவர் தெரிவிக்கையில்; யுத்தம் இன்னும் முடியவில்லை, முடியும் நோக்கில் யுத்தம் நடைபெறுவதாகவும் தெரியவில்லை. யுத்தம் தொடர்வதினால் உயிர் இழப்புக்களும், ஆயுத இழப்புக்களும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் செல்கின்றது. எனவே இவ் இழப்புக்களில் இருந்து நாம் விடுதலைபெற வேண்டும்.

முதலில் வடக்கு-கிழக்கில் உள்ளது இனப்பிரச்சினை என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அதற்கான தீர்வைநோக்கி செல்லவேண்டும் என்றார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் முழு இனத்தைக் கூட ஒன்று திரட்டியாவது இந்த யுத்தத்திற்கு ஓர் தீர்வு காணப்படவேண்டும். எனவே விரைவில் எல்லா கட்சிகளையும் ஒன்றுதிரட்டி இதற்கான முயற்சியில் ஈடுபட அரசாங்கம் தயாராக வேண்டும்.

அநுரா பண்டாரநாயக்கா கட்சி மாறியதும் பிரச்சினை தீரப் போவதில்லை. யுத்தம் தொடர்ந்து நடைபெறும் போது மக்கள் மீது யுத்தத்தின் சுமை ஏற்றப்படுகின்றது. இதனால் அம் மக்கள் தொடர்ந்து பாதிக்கப்படுகின்றனர். எனவே யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதன் மூலம் மக்கள் இழப்புக்களையும், மக்களின் சுமைகளையும் குறைக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## படகுச்சேவை இல்லை

கிளாலி - பூநகரி படகு சேவை மறுஅறிவித்தல் வரை நடைபெற மாட்டாது என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## புலிகளை வெல்ல முடியாது என்று தொப்பேகடுவ அன்றே கூறினார்

### காவலரணிலுள்ள வெள்ளத்தை அகற்ற

## குள அணைக்கட்டுகள் இராணுவத்தால் உடைப்பு

(வவுனியா)

வவுனியாவில் உள்ள இராணுவ காவலரண்களில் மழை வெள்ளம் புகுந்துள்ளதால் வெள்ளத்தை வெளியேற்ற படையினர் அருகிலுள்ள குள அணைக்கட்டுகளை உடைத்துள்ளனர். இதனால் போக்குவரத்துபாதைகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வீச்சில் காயமுற்ற சிறுமி மரணமானார்

(முல்லைத்தீவு)

அலம்பிலில் நான்கு தினங்களுக்குமுன் நடைபெற்ற விமானக் குண்டுவீச்சில் படுகாயமுற்ற மற்றுமொரு சிறுமியும் மரணமாகியுள்ளார்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த சிவமணி ஜெயரஞ்சனி (08) உயிரிழந்தவராவார். இக் குண்டுவீச்சில் ஏற்கனவே இச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த தவணை உயிருடன் இருப்பின் நீதிமன்றத்திற்கு சமுகம் தருவேன்

### இராணுவ சிப்பாய் தெரிவிப்பு

(கொழும்பு)

''பலாலி இராணுவ முகாமில் கடமையாற்றும் நான் உயிருடன் இருந்தால் தான் அடுத்த தவணை வழக்கிற்கு வருவேன்.'' இவ்வாறு இராணுவ சிப்பாய் விஜயகோண் முதியான் சலாகே பண்டார உடுகம நீதிமன்ற நீதிவான் டீ. ரணசிங்க முன்னிலையில் சாட்சியமளிக்கும்போது கூறினார்.

கடந்த வருடம் வாகன விபத்தில் ஒருவருக்கு மரணம் விளைவித்ததாக மேற்படி இராணுவ சிப்பாய்க்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கின்போது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காலி நகரில் பொலிசார் கெடுபிடி மக்கள் துன்புறுத்தப்படுவதாக புகார்

### தென்மாகாண முதலமைச்சர் கவலை

(கொழும்பு)

காலிநகரப் பகுதியில் பொலிசார் பலகெடுபிடி நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாக தென்மாகாண சபையின் முதலமைச்சர்அமரசிறி தொடங்கொட தெரிவித்தார். பாதுகாப்பு, சோதனைஎன்ற பெயரில் மக்கள் பஸ்வண்டிகளிலிருந்து இறக்கப்பட்டு நீண்டதூரம் நடக்கவைக்கப் படுகின்றனர் எனவும், இம் சிக்கப்படுகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். மக்களை வதைக்கும் நோக்கத்துடன் இந் நடவடிக்கைகளில் ஈடுபட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

இருந்து நாடு விடுதலை பெறவேண்டும். இதற்கு, முதலில் வடக்கு-கிழக்கில் உள்ளது இனப்பிரச்சினை என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அதற்கான தீர்வை நோக்கி செல்லவேண்டும். இவ்வாறு கொழும்பு மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரான்லி திலகரட்னா தெரிவித்தார்.

மேலும், அவர் தெரிவிக்கையில்; யுத்தம் இன்னும் முடியவில்லை, முடியும் நோக்கில் யுத்தம் நடைபெறுவதாகவும் தெரியவில்லை. யுத்தம் தொடர்வதினால் உயிர் இழப்புக்களும், ஆயுத இழப்புக்களும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் செல்கின்றது. எனவே இவ் இழப்புக்களில் இருந்து நாம் விடுதலைபெற வேண்டும்.

முதலில் வடக்கு-கிழக்கில் உள்ளது இனப்பிரச்சினை என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அதற்கான தீர்வைநோக்கி செல்லவேண்டும் என்றார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் முழு இனத்தைக் கூட ஒன்று திரட்டியாவது இந்த யுத்தத்திற்கு ஓர் தீர்வு காணப்படவேண்டும். எனவே விரைவில் எல்லா கட்சிகளையும் ஒன்றுதிரட்டி இதற்கான முயற்சியில் ஈடுபட அரசாங்கம் தயாராக வேண்டும்.

அநுரா பண்டாரநாயக்கா கட்சி மாறியதும் பிரச்சினை தீரப் போவதில்லை. யுத்தம் தொடர்ந்து நடைபெறும் போது மக்கள் மீது யுத்தத்தின் சுமை ஏற்றப்படுகின்றது. இதனால் அம் மக்கள் தொடர்ந்து பாதிக்கப்படுகின்றனர். எனவே யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதன் மூலம் மக்கள் இழப்புக்களையும், மக்களின் சுமைகளையும் குறைக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## படகுச்சேவை இல்லை

கிளாலி - பூநகரி படகு சேவை மறு அறிவித்தல் வரை நடைபெற மாட்டாது என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## இராணுவ சிப்பாய் தெரிவிப்பு

(கொழும்பு)

''பலாலி இராணுவ முகாமில் கடமையாற்றும் நான் உயிருடன் இருந்தால் தான் அடுத்த தவணை வழக்கிற்கு வருவேன்.'' இவ்வாறு இராணுவ சிப்பாய் விஜயகோண் முதியான் சலாகே பண்டார உடுகம நீதிமன்ற நீதிவான் டீ. ரணசிங்க முன்னிலையில் சாட்சியமளிக்கும்போது கூறினார்.

கடந்த வருடம் வாகன விபத்தில் ஒருவருக்கு மரணம் விளைவித்ததாக மேற்படி இராணுவ சிப்பாய்க்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் போது

(4 ஆம் பக்கம் பார்க்க)

# காலி நகரில் பொலிசார் கெடுபிடி மக்கள் துன்புறுத்தப்படுவதாக புகார்

## தென்மாகாண முதலமைச்சர் கவலை

(கொழும்பு)

காலிநகரப் பகுதியில் பொலிசார் பலகெடுபிடி நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாக தென்மாகாண சபையின் முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

பாதுகாப்பு, சோதனைஎன்ற பெயரில் மக்கள் பஸ்வண்டிகளிலிருந்து இறக்கப்பட்டு நீண்டதூரம் நடக்கவைக்கப் படுகின்றனர் எனவும், இம்சிக்கப்படுகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். மக்களை வதைக்கும் நோக்கத்துடன் இந் நடவடிக்கைகளில் ஈடுபட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளை வெல்ல முடியாது என்று கொப்பேகடுவ அன்றே கூறினார்

## - காமினிதிஸநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்திற்கு தலைமை தாங்கிய தளபதிகள் மற்றும் யுத்தத்தைநடத்திய கொப்பேகடுவ போன்றஅதிகாரிகள்புலிகளுடனான யுத்தத்தில்வெல்ல முடியாது என கூறிய பின்னரே இந்தியாவுடனான ஒப்பந்தம் துரிதமாக்கப்பட்டது என காமினிதிஸநாயக்கா 'லங்காதீப' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் மந்திரிசபையில் வைத்து இத்தளபதிகள் வடக்கு கிழக்கு யுத்தத்தை வெல்ல முடியாது என கூறினர்.

யுத்தநடவடிக்கையில் ஈடுபட்டுவந்த இத் தளபதிகள் தமது நிலைமையை எடுத்துக் கூறும்போது படையினர் புடைசூழ ரூபவாகினியில் அரசியல் நடாத்திக்கொண்டிருந்த அரசியல் வாதிகளால் இதனை உணரமுடியாது போய்விட்டது. அன்றைய ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனஎடுத்த முடிவினாலேயே இன்று நாடு பிளவுபடாது உள்ளது. விடுதலைப் புலிகளுடனான போரில் இந்தியா தனது படையில் 1300க்கு மேற்பட்டவர்களை இழந்தது. 3000க்கு மேற்பட்டவர்கள் அங்கவீனராகினர். புலிகள் பலவீனப்பட்டு இருந்தார்கள்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கோபாலசாமியை வெளியேற்றியதற்கு தி. மு. க. பொதுச்சபை அங்கீகாரம்

## கருணாநிதி தஞ்சையில் தெரிவிப்பு

(சென்னை)

தஞ்சாவூரில் நேற்றுக்கூடிய தி. மு க. பொதுக்குழுக் கூட்டத்தில் வை கோபாலசாமி கட்சியிலிருந்து நீக்கப்பட்டதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. வை கோபாலசாமி மற்றும் ஒன்பது மாவட்ட செயலாளர்கள் தி. மு. கவிலிருந்து நீக்கப்பட்டதற்கு மு கருணாநிதி தலைமையில் கூடிய தி. மு க. பொதுக்குழு அங்கீகாரம் வழங்கியதாக கருணாநிதி பின்னர் தெரிவித்தார்.

இந்த பொதுக்குழுக் கூட்டத்தில் 1112 உறுப்பினர்களில் 908பேர் கலந்துகொண்டதாக மு. கருணாநிதி தெரிவித்தார். கட்சியின் சின்னத்தையும், கொடியையும் கோபாலசாமி தலைமையிலான அணியினர் பயன்படுத்துவதற்கு பொதுக்குழுவில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

சிலதினங்களுக்குமுன் திருச்சியில் வை. கோபாலசாமி கூட்டிய பொதுக்குழுக் கூட்டம் சட்டவிரோதமானது எனக் குறிப்பிட்ட கருணாநிதி விடுதலைப்புலிகள் தி. மு கவிற்கும் இக் கட்சியின் தலைவர்களுக்கும் எதிராக பிரசாரம் செய்துவருவதாக நேற்றைய பொதுக் குழுக் கூட்டத்தில் குறை கூறப்பட்டதாகவும் தெரிவித்தார். இத்தகைய பிரசாரத்தை உடனடியாக நிறுத்துமாறும் தி. மு. க. பொதுக் குழுக் கூட்டம் கேட்டுக் கொண்டது.

அண்மையில் கட்சியில் மீண்டும் சேர்க்கப்பட்ட நாஞ்சில் மனோகரனுக்கு மீளவும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# நத்தார் ஆராதனைக்குச் சென்ற இளைஞர்கள் பொலிசாரால் கைது

(கொழும்பு)

கொழும்பில் நத்தார் ஆராதனைக்காக கடந்த 24-ம் திகதி நள்ளிரவில் தேவாலயங்களிற்குச் சென்றபல இளைஞர்கள் சுற்றி வளைத்துக் கைது செய்யப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொட்டாஞ் சேனை, ஆமர் வீதி, கொம்பனித் தெரு, பம்பலப்பிட்டி, புறக் கோட்டை, நீர்கொழும்பு, வத்தளை பகுதி பொலிசாரால் இவர்கள் கைது செய்யப்பட்டதாக மேலும் தெரிய வருகிறது

இதேவேளை நள்ளிரவு வேளைகளில் குறிப்பிட்ட பகுதிகளை சுற்றிவளைக்கும் பொலிசார் அங்குள்ள தமிழர்களை வயது, பால் வேறுபாடின்றி கைதுசெய்து கொண்டு செல்வதாகவும் இவ்வாறு கொண்டு செல்லப் பட்டவர்களுக்குஎன்ன நடந்தது? என்பது குறித்து அறிய முடியாத நிலையில் அவர்களது உறவினர் அலைந்து திரிவதாக தெரிவிக்கப்படுகிறது

ஆறு மாதங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட பலரின் நிலைகூட அறியமுடியாத நிலையில், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், காணாமல் போனோர் தொடர்பாக ஆராயும் குழு மற்றும் மனித நேயநிறுவனங்களிடம்முறைப்பாடு செய்துவருவதாக மேலும் தெரியவருகிறது.

# பூநகரி மோதலில் இரு போராளிகள் வீரச்சாவு

பூநகரிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற நேரடி மோதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற மேற்படி மோதலின் போது வீரச்சாவடைந்த கப்டன் ஜெகதீசன்/டானியல் (மகேந்திரராசா அருள் மாறன-பாரதி வீதி கம்பர் மலை வல்வெட்டித்துறை) கப்டன் கந்தன் (இராசா சசிக்குமார் - மணற்காடு குடத்தனை பருத்தித்துறை) இவ்விரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்.



கப்டன் ஜெகதீசன்



கப்டன் கந்தன்

# நடவடிக்கை பணிப்பாளராக கலுப்பகன நியமனம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கை பணிப்பாளர் நாயகமாக பிரிகேடியர் கலுப்பகன நியமிக்கப்பட்டுள்ளார். ஜனவரி முதலாம் திகதி முதல் இவர் தனது பதவியை ஏற்பார்.

கலுப்பகன தற்போது வன்னி மாவட்ட இராணுவ தளபதியாக இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

# தாண்டிக்குளம்சோதனைச்சாவடியில் தடுத்துவைத்து விசாரணை

(வவுனியா)

கொழும்பிலிருந்துவடபகுதி வரும் பயணிகளை தாண்டிக் குளம் இராணுவ சோதனைச் சாவடியில் தடுத்துவைத்து ஒருசில தினங்கள் விசாரித்த பின் தொடர்ந்து பயணம் செய்ய அனுமதிப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 24ம் திகதி வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வர முயன்ற சுமார் 50பேரை இராணுவத்தினர் தடுத்து வைத்து விசாரணை செய்த பின் தொடர்ந்து பயணம் செய்ய அனுமதித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

இவர்கள் தென்பகுதியில் தங்கிய காலம், தங்கியஇடம் சென்ற நோக்கம் என்பவற்றுக்கான ஆதாரங்கள்கோரப் பட்டதாகவும் கடும் விசாரணைக்குப் பின்னரே இவர்கள் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வங்கக்கடலில் காவியமான வேங்கைகள் நினைவாலயம்

வங்கக்கடலில் காவியமான கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகள் நினைவாக சாவகச்சேரி நவீன சந்தை முன்பாக அமைக்கப்பட்டுள்ள நினைவாலய திறப்புவிழா இன்று மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது:

இதனைத் தொடர்ந்து நினைவுக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற வுள்ளன.

## வரி விளம்பரம்


### கடிகாரங்களா? றேடியோவா?

நல்ல நிலையில் உள்ள கடிகாரங்கள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். விற்கப்படும். சகல கடிகாரங்கள் றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும். டில்கா வாச் அன்ட் றோடியோ வேக்ஸ் (Dilka Watch & Radio Works) ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகில்) கிளை- கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-8129)

### விற்பனைக்கு

அரசாங்க, தமிழீழ விடுமுறை நாட்கள் அடங்கிய படக் கலண்டர்கள் ரூபா 6/-க்கு எம்மிடம் விலாசம் பதிப்பித்துபெற்றுக்கொள்ளலாம். மற்றும் பெரிய, நடுத்தரக் கலண்டர்களுக்கும் ஸ்ரீலங்கா அச்சகம், ராஜா தியேட்டர் அருகாமை, ஸ்ரீகாந்தா அச்சகலேன், யாழ்ப்பாணம். (7065)


## நெல் வயல்களில் இலைச்சுருட்டி நோய்

நெற் பயிர்களில் இலைச்சுருட்டி நோயின் தாக்கம் அதிகமாகக் காணப்படுவதாக கூறப்படுகிறது. அரியாலை, செம்மணி பகுதிகளில் கூடுதலாகவும், பொதுவாக பரவலாகவும் காணப்படும் இந்நோயை குளோறோபைறிபொன் 20 சதவீத செறிகுழம்பு அல்லது பென்தயன் 50சதவீத செறிகுழம்பு 25 மில்லி லீற்றரை 12 லீற்றர் நீரில் கலந்து விசிறிக் கட்டுப்படுத்தலாம் என்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெறுபேறுகள் வெளிவந்தன

பேராதனைப் பல்கலைக்கழகம் மே1993, செப்டம்பர் 1993 களில்நடத்தியமருத்துவ பீடப் பரீட்சைகளின் பெறுபேறுகள் தற்போது வெளியிடப் பட்டுள்ளன.

## வெள்ளத்தால் பாதிப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளத்தினால் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. குடிசைகள் பல வீழ்ந்துள்ளன.

நாகர் கோவில் வடக்கு

## தற்காலிக ஊழியர்களுக்கு சீருடைத் துணி இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையில் நிரந்தர ஊழியர்களுக்கு மட்டுமே சீருடை உண்டு. ஏனைய தற்காலிக ஊழியர்களுக்கு சீருடை வழங்கப்படவில்லைஎன மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுபற்றி தெரியவருவதாவது; யாழ் போதனா மருத்துவமனையில் நிரந்தர சிற்றூழியர்களுக்கு சீருடைக்கான துணிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அங்கு பல வருடங்களாக பணிபுரியும் தற்காலிக ஊழியர்களுக்கு சீருடைத்துணிகள் வழங்காமையினால் அவர்கள் மன வேதனை அடைந்துள்ளனர். இங்கு 1987 ஆம் ஆண்டு தொடக்கம் தற்காலிகமாக பணியாற்றி வரும் சிற்றூழியர்களும் இதில் அடங்குகிறார்கள். இதுவரை இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் ஏதாவது எடுக்கப்பட்டுள்ளதா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

மேற்படி தற்காலிக ஊழியர்களாக 40 பேர் பணிபுரிகின்றனர். இவர்களுள் 17 பேர் பெண் ஊழியர்களாவர் இவ் ஊழியர்களில் அனேகமானோர் நிரந்தரமாக்குவதற்கான தகுதிகள் இருந்தும் அவர்களது நிரந்தர நியமனத்திற்கு அதிகாரிகளின் அசிரத்தையே காரணமென பேசப்படுகின்றது.

மேற்படி தற்காலிக சிற்றூழியர்கள் தமக்கு தேவையான சீருடைகளை தமது சொந்தப் பணத்திலேயே வாங்கவேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மாத்தளன் கடற்பகுதியில் இரு மீனவர்கள் மரணம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பை அடுத்துள்ள மாத்தளன் கடற்பகுதியில் கடலின் அலைக்குள் சிக்கி இரு மீனவர்கள் உயிரிழந்துள்ளனர். கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற இப் பரிதாபகரமான சம்பவத்தில் குணரத்தினம் (45 வயது) சிவராசா நேசராசா (36 வயது) ஆகிய இருவருமே உயிரிழந்தோராவார். குணரத்தினம் என்னும் மீனவர் ஞாயிறன்று கடலில் மீன்பிடிக்கச் சென்று திரும்பிய போது அலைக்குள் சிக்கியதாகவும், அதனைக் கரையில் நின்று கவனித்த நேசராசா மீட்புக்காக உடன்சென்றதாகவும், பின்னர் இருவரும் கடல் அலைகளால் இழுத்துச் செல்லப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. எனினும் சம்பந்தப்பட்டவர்களின் சடலங்கள் இதுவரை மீட்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## புலமைப் பரிசில் வழங்க ஏற்பாடு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு பல்கலைக் கழக மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

வடமராட்சி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இப்புலமைப் பரிசிலை வழங்கவுள்ளது.

வருடாந்தம் சங்கத்தின் இலாபத்தில் குறிப்பிட்டளவு பணம் இப் புலமைப்பரிசிலுக்கு ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

வடமராட்சி கிழக்கிலிருந்து பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் மாணவர்கள், இப் புலமைப் பரிசிலுக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள். (36)

## கிணற்றுநீர் அசுத்தம்

வெள்ளப்பெருக்கினால் வடமராட்சி கிழக்கில் பல இடங்களில் கிணற்றுநீர் அசுத்தமடைந்துள்ளது.

அகதிமுகாம்கள் உட்பட பல இடங்களில் கிணற்றைச் சுற்றி வெள்ளம் தேங்கிக் காணப்படுவதே இதற்குக் காரணமாகும்.

கிணற்றுநீர் துர்நாற்றம் வீசுவதுடன், அசுத்தநிறத்தையுடையதாகக் காணப்படுகின்றது

இதனால் நோய்கள் பரவக்கூடிய ஆபத்து காணப்படுகின்றது. (36)

## குளங்கள், வடிகால்கள் புனரமைக்க நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குளங்கள் மற்றும் வடிகால்கள் என்பன 1994இல் புனரமைக்க சுமார் 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ் மாநகர சபைக் கணக்காளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நீர்விநியோகத்திற்கு 10 இலட்சமும் வீதி விளக்குகள் அமைக்க இரண்டு இலட்சமும் ஏனையவைக்கு சுமார் 53 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மொத்தமாக இதற்கென 80 இலட்சம் ரூபா அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்நிதி புனர்நிர்மாணநிதியத்தில் இருந்து பெறப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா)

## வீதி விளக்கு அமைக்க நடவடிக்கை

(தொல்புரம்)

அராலி மேற்குப் பகுதியிலுள்ள முக்கிய சந்திகளில் வீதி விளக்குகள் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இராஜன் கதிர்காமர் பொதுப்பணி மன்றவிளையாட்டுக் கழகத்தினர் எடுத்துக் கொண்ட இவ் வீதி விளக்கு அமைப்பு நடவடிக்கைக்கான அனுமதியை வலிமேற்கு பிரதேச சபை வழங்கியுள்ளதாகவும், வீதி விளக்கு அமைப்பு வேலைகளில் மேற்படி விளையாட்டுக்கழகம் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது எனவும் தெரியவருகிறது. (41)

## கோழித்திருட்டுகள் அதிகரிப்பு

(தொல்புரம்)

தொல்புரம் மேற்குப் பகுதியில் சமீப காலமாக கோழித்திருட்டு அதிகரித்துக் காணப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

அவ்விடத்தைச் சேர்ந்த கா. கோபாலகிஷ்ணன், க. மோகனதாசன் என்பவர்களினதும், வேறு சிலரினதும் கோழிகள் பல திருடப்பட்டுள்ளது. இக் கோழித்திருடர்கள் பகல் வேளைகளிலும் இரைதேடச் செல்லும் கோழிகளை மடக்கிபிடித்து செல்வதாகவும், இரவில் மரங்களில் படுத்திருக்கும் கோழிகளைக் கூட தந்திரமான முறையில் பிடித்துச் செல்வதாகவும் தெரிய வருகிறது இத்திருடர்களின் தொல்லையினால் கோழிவளர்ப்பில் ஈடுபட்டு உள்ள வறிய மக்கள் பலர் தமக்கு பாரிய நட்டம் ஏற்படலாம் என அச்சம் தெரிவித்துள்ளனர். (41)

## நூற்றாண்டு விழா கொண்டாடப்படும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் நூற்றாண்டு விழா தைமாத நடுப்பகுதியில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை அபிவிருத்திச்சபைத் தலைவர் வைத்திய கலாநிதி சி. கதிரவேற்பிள்ளை (மாவட்ட வைத்திய அதிகாரி) தலைமையில் நடைபெறவுள்ளது இவ் விழாவின் போது ''வைத்தியசாலை நூற்றாண்டு விழா'' மலரும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. இந் நூற்றாண்டு விழாவுக்கான சகல நடவடிக்கைகளையும் வைத்திய சாலை அபிவிருத்திச்சபை மேற்கொண்டு வருகின்றது. (25)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்

20 05 1922

மறைவு

30 11-1993

திரு. ச. செல்லத்துரை அவர்கள்


அளவெட்டிமேற்குசனசமூக நிலையத்தின் ஆரம்பகாலஉறுப்பினரும்நிர்வாகசபை உறுப்பினருமாக விளங்கி30- 11- 1993இல் இறைபதமடைந்த தங்கள் சேவையை நெஞ்சிருத்தி நிற்கும்,

அளவெட்டி மேற்கு,


சனசமூக நிலைய நிர்வாக சபை

(7074)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



## 6-வது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:

30-11-1961

உதிர்வு:

30-12-1987

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாராவின்

உணவுப்பார்சல்களை (மீன், மரக்கறி, இறைச்சி)

னிக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### பெறுபேறுகள் வெளிவந்தன

பேராதனைப் பல்கலைக் கழகம் மே1993, செப்டம்பர் 1993 களில்நடத்தியமருத்துவ பீடப் பரீட்சைகளின் பெறுபேறுகள் தற்போது வெளியிடப் பட்டுள்ளன.

### வெள்ளத்தால் பாதிப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளத்தினால் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. குடிசைகள் பல வீழ்ந்துள்ளன.

நாகர் கோவில் வடக்கு வீதி, எழுதுமட்டுவாள்-நாகர் கோவில் வீதி, நாகர்கோவில்-உடுத்துறை கடற்கரை வீதி, மருதங்கேணி - பருத்தித்துறை வீதி ஆகியன பல இடங்களில் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அகதி முகாம்களுக்கு வெள்ள நீர் புகுந்ததினால் பல குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

வடமராட்சி கிழக்கு வெள்ளக் காடாகவே காட்சியளிக்கின்றது. (36)

கலைக் கழக மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

வடமராட்சி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இப்புலமைப் பரிசிலை வழங்கவுள்ளது.

வருடாந்தம் சங்கத்தின் இலாபத்தில் குறிப்பிட்டளவு பணம் இப் புலமைப்பரிசிலுக்கு ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

வடமராட்சி கிழக்கிலிருந்து பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் மாணவர்கள், இப் புலமைப் பரிசிலுக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள். (36)

### அசுத்தம்

வெள்ளப்பெருக்கினால் வடமராட்சி கிழக்கில் பல இடங்களில் கிணற்று நீர் அசுத்தமடைந்துள்ளது.

அகதிமுகாம்கள் உட்பட பல இடங்களில் கிணற்றைச் சுற்றி வெள்ளம் தேங்கிக் காணப்படுவதே இதற்குக் காரணமாகும்.

கிணற்றுநீர் துர்நாற்றம் வீசுவதுடன், அசுத்தநிறத்தையுடையதாகக் காணப்படுகின்றது

இதனால் நோய்கள் பரவக் கூடிய ஆபத்து காணப்படுகின்றது. (36)


ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாராவின்**

உணவுப்பார்சல்களை (மீன், மரக்கறி, இறைச்சி)
தினமும் காலை 11.45 முதல் பிற்பகல் 3.30 மணிவரை
பெற்றுக் கொள்ளலாம்

ஜோ. எகட்டனின்


**ஜெசித்தாரா**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை
சுண்டுக்குளி. (சி-8187)


கோழிவளர்ப்பில் ஈடுபட்டு உள்ள வறிய மக்கள் பலர் தமக்கு பாரிய நட்டம் ஏற்படலாம் என அச்சம் தெரிவித்துள்ளனர். (41)

ளது. இந் நூற்றாண்டு விழாவுக்கான சகல நடவடிக்கைகளையும் வைத்திய சாலை அபிவிருத்திச்சபை மேற்கொண்டு வருகின்றது. (25)

## 6-வது ஆண்டு நினைவஞ்சலி




மலர்வு:
30-11-1961

உதிர்வு:
30-12-1987

**செல்வன் கணேசன் சண்முகம்**
(சின்னபாபு)

அன்புடன் நினைவு கூரும்
பப்பா, அம்மா, அண்ணா,
அண்ணி, மகன், அக்கா,
அத்தான், மருமக்கள்.

108, பிறவுண்வீதி,
நீராவியடி
யாழ்ப்பாணம்.
(7034)



செல்வன்

**விஜயரத்தினம் தேவகுமார் (அறிவாளி)**

(யா/சென் ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவமணி)

ஆண்டவன் ஆக்கம்: 27. 11. 1970
அரக்கர் அழிப்பு: 30. 12. 1989

உன் ஆத்மா சாந்தியடைய நித்தம் பிரார்த்திக்கும்

தேவகுமார் வீதி,
71/9, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (6923)

- குடும்பத்தினர்.


## பாடசாலை மாணவர்களுக்கு
### ஓர் அரிய சந்தர்ப்பம்!

மலரப்போகும் புத்தாண்டிலிருந்து சொகுசு இருக்கை வசதிகளுடன் கூடிய "டொயாட்டா கோஸ்ரர்" பஸ்வண்டி ஒன்று மல்லாகத்தில் இருந்து வேம்படி மகளிர் பாடசாலைச் சந்தி, யாழ். நகர் வரை பாடசாலைச் சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளது.

பயணம் செய்ய விரும்புவோர்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

★ மது புத்தகசாலை
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

★ பவித்திரா பான்ஸி ஹவுஸ்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

★ நித்தியா ஸ்பொட்
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

★ சிக்கோ காட்வெயர்
கே. கே. எஸ். வீதி,
தாவடிச் சந்தி,

★ தாசன் ஸ்ருடியோ
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.

(சி-8235)


## 48-ம்நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்:
29-12-1975

தாயக மண்ணில்:
13-11-1993

**2-ம் லெப். சிவகுமாரன்**
**(குழந்தைவேலு சத்தியேந்திரா)**

பூநகரி சமரில் வீரச்சாவடைந்த தமிழ் மறவா! நீ சாகவில்லையடா தமிழ் கூறும் நல்லுலகம் உள்ள வரை நீ வாழ்வாய்!

நீ சிந்திய ஒவ்வொரு உதிரமும் தமிழ்ஈழ விடுதலைப் பயிருக்குப் பாய்ச்சிய நீராகும். உனது வித்துடல் அதற்கிடப்பட்ட பசளை, உனது புகழுடல் அதற்குயிர் ஊட்டும் சூரிய ஒளி.

மாவீரராகி மாபுகழ் எய்திய வீர மைந்தனே! உன் பெயர் வாழ்க.

தமிழ் ஈழம் மலர்க!

**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

(சி-8238)

## நினைவுகூருகின்றோம்...
### 1993-12-30

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் அம்பாறை, கல்முனைப்பகுதியில் சுவரொட்டி ஒட்டும்போது சிறிலங்கா காவற்துறையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**மாறன்** (நாகராசா திருமாறன்-கல்முனை-02-அம்பாறை)

1987-ம் ஆண்டு பெரியவிளான் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய,

**ராமு** (— — —)

காத்தான்குடிப்பகுதியில் ஜிகாத்குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**நசீர்** (முகமட் நசீர்-காங்கேயன்ஓடை-மட்டு)

1989ஆம் ஆண்டு தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**விஜயரட்ணம் தேவகுமார்** (அறிவொளி) - அரசடி வீதி-யாழ்ப்பாணம்)

1990ஆம் ஆண்டு குப்பிளானில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சாஜி** (சாந்தி அன்னம்மா சின்னையா-ஆனந்தம் பண்ணை, உருத்திரபுரம்கிழக்கு-கிளிநொச்சி)

1991ஆம் ஆண்டு மட்டுநகரில் வீரச்சாவெய்திய,

**கென்றி** (— — —)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8339)

நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

அசைக்க முடியாத உறுதியும், திடசித்தமும் கொண்டவன் உலகைத்தன், வழியில்தானே உருவாக்கிக்கொள்வான்.

யோஹன் கேத்தே

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 30-12-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

## சமாதானத்தின் குரல் பலவீனமாகவே உள்ளது

சிறிலங்காவில் முன்னர் எப்பொழுதும் இல்லாத அளவில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற குரல்கள் ஓரளவு பலமாகவே கேட்கின்றன. இப்பேச்சுக்கள் பூநகரிப் படைத்தளம் தகர்ப்பின் பின் இராணுவத் தீர்வில் நம்பிக்கை இழந்து விட்டவர்களிடம் இருந்தும், முன்னர் தீர்வின் அவசியம் பற்றிப் பலவீனமான குரலில் பேசிவந்தவர்கள் மத்தியில் இருந்துமே சற்றுப் பலமாக ஒலிக்கத் தொடங்கியுள்ளன. இதில், சில தென்னிலங்கைப் பத்திரிகைகளும் உள்ளடங்குகின்றன.

தீர்வை வற்புறுத்தி வருபவர்கள், இன்று உலகில் நடைபெறும் மாற்றங்களைச் சுட்டிக்காட்டுபவர்களாகவும் சிறிலங்கா அரசு அவ் வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முற்படலாம் - காணலாம் எனவும் வற்புறுத்துபவர்களாகவுள்ளனர். அதாவது, அவர்கள் முன் குறிப்பாக இஸ்ரேல் - பாலஸ்தீன விடுதலை இயக்க சமாதான உடன்பாடும், பிரிட்டிஷ்- ஐரிஸ் விடுதலை இயக்க சமாதான உடன்பாடும் மனக்கண் முன் உள்ளன.

ஆனால், சிறிலங்கா அரசாங்கமோ மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் இவற்றிற்கு எதிர்மாறாகவே உள்ளது. சிறிலங்கா ஜனாதிபதியோ இராணுவம் வட பகுதி மீது மேற்கொள்ளவுள்ள தாக்குதல் திட்டத்தை பெப். 4ஆம் திகதிக்கு முன்னர் தருமாறு முப்படைத் தளபதிகளுக்கும் பணிப்புரைவழங்கியுள்ளார். அத்தோடு, இராணுவத் தீர்வுக்கான முழு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றது.

இராணுவத் தளபாடங்களை மேலும் கொள்வனவு செய்வதற்கு பெரும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு, நவீன ஆயுதங்களிலும் கவனம் செலுத்தப்படுகின்றது. அத்தோடு, புதிய படையணிகளைப் பெருக்கவும், அவர்களைப் போர் முனைக்கு அனுப்பவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

இதேவேளை, பூநகரித் தோல்வியின் பின்னர்

# அமைச்சர் பதவி பறிக்கப்பட்டாலும் மக்கள் நலனுக்கான முடிவு மாறாது

### தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

எனது அமைச்சர் பதவி பறிக்கப்படலாம் நான்பாராளுமன்ற உறுப்பினராக கூட இருக்க முடியாத நிலை தோன்றலாம். ஆனால் இதற்காக எமது மலையக மக்களுக்காக எடுத்த முடிவை மாற்ற முடியாது.

இவ்வாறு அமைச்சரும், இ.தொ.கா. தலைவருமான எஸ். தொண்டமான் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில், கட்சிக்குள் இருந்து கொண்டு கட்சிக்கு எதிராக செயற்படுபவர்களைகட்சிக்குள் தொடர்ந்தும் வைத்திருப்பது ஆபத்தை தருகின்ற செயலாகும். எனவே அவர்களை கட்சியில் இருந்து மிக விரைவில் வெளியேற்றுவேன்.

இ. தொ. கா. சிறிலங்காவின் சிங்களகட்சிகளை மையமாகக் கொண்டு இயங்கவில்லை. மலைய மக்களை மையமாகக் கொண்டே இயங்கி வருகிறது. அம் மக்களுக்கு நன்மை கிடைக்கும் என எதிர்பார்த்து அரசுடன் சேர்ந்து செயல்பட்டோம். ஆனால் இன்று அவை கிடைக்கக் கூடிய நிலை இல்லை எனவே தான் முடிவை மாற்றிக் கொண்டோம். கட்சி எடுக்கும் முடிவுக்கு கட்சி உறுப்பினர்கள் கட்டுப்பட்டே ஆக வேண்டும் இல்லாவிட்டால் அவர்களை வெளியேற்ற வேண்டும் இதுதான் கட்சியின் முடிவு

மலையக மக்கள் இக் காலத்தில் மிகவும் விழிப்பாக செயற்பட வேண்டும். உங்களுக்கு எதிராக சில வன்முறை சக்திகள் கட்டவிழ்த்து விடப்படலாம். எனவே மிக அவதானமாக உங்கள் நடவடிக்கை இருக்க வேண்டும் கூடியவரையில் உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

இ. தொ. காவை எவராலும் கட்டுப்படுத்த முடியாது. யார் கட்சியை விட்டு விலகினாலும் கட்சி தொடர்ந்து தன் பயணத்தை தங்குதடையின்றி. மேற்கொள்ளும் சிலர் நினைப்பது போல அவர்கள் கட்சியை விட்டு விலகி விடுவதால் கட்சி பலவீனம் அடையப் போவதில்லை இது ஒரு போதும் நடைபெறாது.

இ. தொ. கா. மலையக தோட்ட தொழிலாளர்களை நம்பி இருக்கிறதே தவிர மாகாண சபை உறுப்பினர்களை நம்பியல்ல என்பதை மட்டும் எல்லோரும் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும் மலையக மக்களின் நலனுக்கு எந்த ஆபத்து வந்தாலும் அதனை இ. தொ. கா. இருக்கும் வரை சுட்டிக் காட்டியே தீரும். எமது கட்சியிலிருந்து பலர் பிரிந்து சென்று இருக்கின்றபோதும் கட்சியின் வளர்ச்சி குறைந்து விடவோ பின்நோக்கி தள்ளப்பட்டுவிடவோ இல்லை.

இ தொ. கா ஆரம்பத்திலிருந்தே பல இன்னல்களை கடந்து வந்துள்ளது. பல மிரட்டல்களை சந்தித்துள்ளது. எனவே இன்று எனக்கு விடுக்கப்பட்ட கொலை மிரட்டல் புதியது ஒன்று அல்ல. நான் இதற்கு என்றும் அடிபணிய மாட்டேன் தோட்டத் தொழிலாளர்கள் என் பக்கம் இருக்கும் வரை நான் எதற்காக பயப்பட வேண்டும்

மலையக மக்களின் நலனில் அக்கறை செலுத்தாமல் தமது நலனை மட்டும் கொண்டு செயற்படுவோருக்கு மக்கள் தான் தகுந்த பாடத்தைக் கற்பிக்க வேண்டும். எத்தனை இடர்களை நாம் சந்திக்க நேர்ந்தாலும் நாம் முன்வைத்த கொள்கையில் இருந்து பின்வாங்கப்போவது இல்லை.

மலையகத்தில் பதற்ற நிலையை ஏற்படுத்த ஆட்சியாளர் நினைக்கலாம் ஆனால் அதன் தாக்கம் பெரிதாகவும், அரசாங்கம் எதிர்பார்க்காததாகவும் இருக்கலாம் என்பது மட்டும் உண்மை. வடக்கு கிழக்கு நிலைமை வேறு. அப் பகுதி இலங்கையிலிருந்து தனிமைப் படுத்தக் கூடியதாக உள்ளது அங்கு நடப்பது தெரியாது அங்கு பொருளாதார முக்கியத்துவம் இல்லை. ஆனால் மலைநாட்டை பொறுத்த மட்டில் நிலை என்னவாக இருக்கும் என்பதை நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை எனவும் தெரிவித்தார்.

## நியமனம் பெற்றார்

(யாழ்ப்பாணம்)

வேலணை, ஊர்காவற்றுறை பிரிவுகளின் புதிய பிரதேச செயலராக செல்வி ரூபனாகனகரெட்ணம் நியமனம் பெற்றுள்ளார். இம் மாதம் (டிசம்பர்) 1ஆம் திகதி தொடக்கம் இந்நியமனத்தைப் பெற்றுள்ள இவர் முன்னர் சங்கானை பிரதேச செயலராக கடமையாற்றியவர் ஆவார். வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலராக கடமையாற்றிய திரு. இளங்கோவன் தற்போது சங்கானை பிரதேச செயலராக நியமனம் பெற்றுள்ளார்.

## இணைப்புக் குழுவின் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பன்முக வரவு செலவுத் திட்டம் தொடர்பான இணைப்புக் குழுக் கூட்டம் இன்று காலை ஒன்பது முப்பது மணியளவில் யாழ், மாவட்ட செயலகத்தில் நடைபெறும் என்று அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

இக் கூட்டத்தில் மாவட்ட செயலகத்தின் பகுதித் தலைவர்கள், மாவட்ட மட்ட திணைக்களத் தலைவர்கள், மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளும்படி வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. இக் கூட்டத்தின் போது தொடர் வேலைகளின் முன்னேற்றம், புதிய வேலைகள் பற்றிய பரிசீலனை, தொடர் வேலைகளும் திட்டத் தயாரிப்பும் போன்ற அம்சங்கள் ஆராயப்படவுள்ளன.

## நம்பிக்கையில்லாதீர்மானம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

தென்மாகாணசபையின் கூட்டம் நேற்று நடைபெற்றபோது மாகாண முதல்வர் அமரசிறி தொடங்கொடவிற்கு எதிராக எதிர்க்கட்சி தலைவரால் கொண்டு வரப்பட இருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை அவர் தாமாகவே கைவிடுவதாகத் தெரிவித்தார்.

## மின் மற்றும் நீர் வழங்கல் திட்டத்தால் மேலதிகசெலவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபைக்கு மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேலதிக செலவு ஏற்பட்டுள்ளது என்று மாநகர சபை தெரிவித்துள்ளது.

பொது நிதியில் இருந்து பெறப்பட்டே இம் மேலதிகச் செலவு ஈடு செய்யப்படவுள்ளதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தற்போது மின்சாரம்வழங்கப்படாத போதிலும் அது தொடர்பான செலவுகளும், நீர் வழங்கலுக்கான செலவுகளும்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அடுத்த ஆண்டிற்கான யாழ்ப்பாண மாநகரசபையின் வருமானம் சுமார் 71.9 மில்லியன் ரூபாய்களாக இருக்குமென எதிர்பார்க்கப்படுவதாக மாநகரசபைக் கணக்காளர் மேலும் தெரிவித்தார்.

## உதவி வழங்கப்பட்டது

(தொல்புரம்)

சங்கரத்தை குளிப்பொன் வீதியிலுள்ள வீடு ஒன்றின் மண்சுவர் இடிந்து வீழ்ந்ததில் கடந்த வாரமளவில் பலியான ம. கணபதிப்பிள்ளை (73) அவரது மகளான தே இராசேஸ்வரி (47) ஆகிய இருவரின் மரணச் செலவிற்காக 4000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

சங்கரத்தை கிராமசேவை உத்தியோகத்தர் திரு. வ. விஜயவேல் அவர்கள் எடுத்த துரித முயற்சியினால் சங்கானை உதவி அரச அதிபர் பணிமனை வழங்கியுள்ளது.

(41)

## கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில் வாடகை சேவையில் ஈடுபடும் மோட்டார் கார் உரிமையாளர்களின் கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். பஸ் நிலையக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

## "வழிகாட்டி" வெளியீடு

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மருதனார் மடக் கல்விக் கோட்டத்தினரின் ''வழிகாட்டி'' கையெழுத்துசஞ்சிகைவெளியீடுநாளை வெள்ளிக்கிழமை பி. ப. 3.00 மணிக்கு யா/சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## பொருளாதார தடையை நீக்க சீனா பாகிஸ்தான் கூட்டாக கோரிக்கை

(பீக்கிங்)

சீனாவின் மீதும், பாகிஸ்தான் மீதும் அமெரிக்கா ... இந்தியாவுடன் பாகிஸ்தானின் முரண்பாடு பற்றியும், விரிவாக ஆராயப்பட்டுள் ... வேண்டுமெனவும், சீனப் பிரதமர் லீ பெங் கூறியுள்ளார்.

## உருளைக் கிழங்குகளை

ரேல் - பாலஸ்தீன விடுதலை இயக்க சமாதான உடன்பாடும், பிரிட்டிஷ்- ஐரிஸ் விடுதலை இயக்க சமாதான உடன்பாடும் மனக்கண் முன் உள்ளன.

ஆனால், சிறிலங்கா அரசாங்கமோ மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் இவற்றிற்கு எதிர்மாறாகவே உள்ளது. சிறிலங்கா ஜனாதிபதியோ இராணுவம் வட பகுதி மீது மேற்கொள்ளவுள்ள தாக்குதல் திட்டத்தை பெப். 4ஆம் திகதிக்கு முன்னர் தருமாறு முப்படைத் தளபதிகளுக்கும் பணிப்புரைவழங்கியுள்ளார். அத்தோடு, இராணுவத் தீர்வுக்கான முழு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றது.

இராணுவத் தளபாடங்களை மேலும் கொள்வனவு செய்வதற்கு பெரும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு, நவீன ஆயுதங்களிலும் கவனம் செலுத்தப்படுகின்றது. அத்தோடு, புதிய படையணிகளைப் பெருக்கவும், அவர்களைப் போர் முனைக்கு அனுப்பவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

இதேவேளை, பூநகரித் தோல்வியின் பின்னர் இராணுவத்தில் பெரும் புனரமைப்பு வேலைகளும் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றில் களை எடுப்புக்கள் உட்பட பதவிநிலை மாற்றங்கள், பதவி உயர்வுகள், பொறுப்பு மாற்றங்கள் எனப் பல விடயங்கள் இடம் பெற்று வருகின்றன. இதனால், சில முரண்பாடுகளும் உருவாகாமல் இல்லை. இருப்பினும் இராணுவத்தை விரைவில் சண்டைக்கு தயார்படுத்தும் நோக்கில் மிக விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றது என்பதே அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

அத்தோடு, கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதென்ற அரசின் தீர்மானமானது மேலும், இனமோதல்களையும், வன்முறைகளையும் அதிகரிக்கும் ஒன்றாகவும் புதிய நெருக்கடிகளை உருவாக்கும் என்பதும் அரசாங்கத்திற்கு தெரியாத புதிய விடயம் ஒன்றல்ல. கிழக்கில் தேர்தல்களை நடத்துவதென்ற அரசாங்கத்தின் முடிவானது, வடக்கு, கிழக்கில் அமைதி என்பதற்கே அரசாங்கம் உருவாக்கும் ஒரு பெருந்தடை என்றே கொள்ளவேண்டும்.

அதாவது, சிறிலங்காவில் முன்னரைவிட சமாதானம் பற்றி பேசப்பட்டாலும், அவர்கள் இன்னும் பலவீனமானவர்களாகவே உள்ளனர் என்பதே உண்மையாகும். அத்தோடு, சமாதானம் அமைதித் தீர்வு என்று எதிர்க்கட்சிகள் பேசினாலும் சமாதானம் எவ்வாறு உருவாக முடியும் என்பது பற்றியோ அன்றி சமாதானத்தில் நம்பிக்கை கொண்டவர்களாகவோ இருப்பதாகத் தெரியவில்லை. அதாவது, அரசியற் கட்சிகளின் சமாதானம் பற்றிய பேச்சுக்கள் திருப்தி அளிப்பவையாக இல்லை. இந் நிலையில் சமாதானத்தின் குரல் பலவீனமானதாகவே தற்பொழுதும் உள்ளது என்பதே நிஜமாகும்.

ஆனால், மறுவளமாக யுத்தத்திற்கான குரல் பலமானதாகவும் அதிகாரத்தில் உள்ளவர்களிடம் இருந்தும் வெளிவருகிறது. உலக மாற்றங்கள் படிப்பினைகள் என்பது அதற்குப் புறக்குடத்தில்வார்த்த நீர் போன்றுள்ளது. அதாவது, சமாதானத்தின் குரல் வளையை நசித்து விடும் பலம் பொருந்தியதாக யுத்த முஸ்தீபுகள் இடம் பெற்று வருகின்றன. இந்நிலையானது, இலங்கையில் அமைதி சமாதானம் என்பவை அண்மையில் உருவாக சிறிலங்கா அரசு அனுமதிக்கப் போவதில்லை என்பதையே காட்டுகின்றது. தமிழரின் வாழ்வும், சமாதானமும், தமிழீழப் போரின் வெற்றியிலேயே தங்கியுள்ளது என்பதே இவை வெளிப்படுத்துபவையாகவே உள்ளன.

---

(கொழும்பு)

தென்மாகாணசபையின் கூட்டம் நேற்று நடைபெற்ற போது மாகாண முதல்வர் அமரசிறி தொடங்கொடவிற்கு எதிராக எதிர்க்கட்சி தலைவரால் கொண்டு வரப்பட இருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை அவர் தாமாகவே கைவிடுவதாகத் தெரிவித்தார்.

## கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில் வாடகை சேவையில் ஈடுபடும் மோட்டார் கார் உரிமையாளர்களின் கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். பஸ் நிலையக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

## "வழிகாட்டி" வெளியீடு

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மருதனார்மடக் கல்விக் கோட்டத்தினரின் ''வழிகாட்டி'' கையெழுத்துசஞ்சிகைவெளியீடுநாளை வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யா/சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## உருளைக் கிழங்குகளை வரம்புகளில் பயிரிடவும்

(யாழ்ப்பாணம்)

இரண்டு அடி இடைவெளியில் அமைக்கப்படும் வரம்புகளில் பத்து அங்குலத்திற்கொன்றாக உருளைக்கிழங்கை நடுகை செய்யும்படியும், இரு வரம்புகளுக்கு இடைப்பட்ட வெளியை நன்கு நீர் வடியக் கூடியதா வெட்டி விடுமாறும் ஓரங்களில் வடிகால்களை அமைக்குமாறும், கூடுதலாக உக்கிய சேதன பசளைகளை இடுமாறும் உருளைக்கிழங்கு செய்கையாளர்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உருளைக்கிழங்கு சால்சளில் பயிரிடப்படுவது வழக்சமாயினும் இப்போது பெய்து வரும் கடும் மழையின் காரணமாக இதுவரையில் நடப்பட்ட உருளைக் கிழங்கு பயிர் வலிகாமத்தில் பெரிதும் பாதிப்பு அடைந்திருப்பதாகவும் அச் செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## மூன்று கட்டங்களாக செயலக திருத்தவேலைகள்

(யாழ்ப்பாணம்)

விமானத் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்த யாழ். செயலக கட்டடம் மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டு திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட இருப்பதாக தெரியவருகின்றது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவதுகட்டடத்திருத்த வேலைக்காக முதற்கட்டமாக சீமெந்தும், கூரைக்கான சீற்றும் ஜனவரி இரண்டாம் வாரமளவில் கொழும்பிலிருந்து வந்துவிடும் எனவும், இவற்றைக் கொண்டு கூரையும் மற்றும் இடிந்த சுவர்கள் முதல் கட்டமாக திருத்தப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த கட்ட திருத்த வேலை உள்ளூர் மரங்களைக்கொண்டு கதவு ஜன்னல் என்பன திருத்தி அமைக்கப்படுமெனவும் மூன்றாவது பகுதி திருத்த வேலை வர்ணம் பூசுதலும் மற்றும் இங்கு கிடைக்காத கட்டடத்திற்கு தேவையான பொருள்கள் இரண்டாம் கட்டமாக கொழும்பிலிருந்து எடுக்கப்பட்டு திருத்தவேலைகள் நடைபெறுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கட்டடத் திருத்த வேலைகள் நிர்மாணத்திணைக்கள நிறைவேற்று பொறியியலாளரின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் நடைபெறவுள்ளதாக தெரியவருகின்றது. (சி)

## கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான நவம்பர்மாதக் கொடுப்பனவு தற்போது யாழ். பிரதம தபாலகத்தில் இயங்கும் ஊர்காவற்றுறை பிரிவு தபாலகத்தில் வழங்கப்படுவதாகவும் இத்துடன் தொழுநோய், காசநோய், புற்றுநோய் என்பவற்றால் பாதிக்கப்பட்டோருக்கான உதவிக் கொடுப்பனவும்வழங்கப்படுவதாகவும் வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலர் வட்டாரங்கள் தெரிவித்தன. (22)

---

செலவு ஈடு செய்யப்படவுள்ளதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தற்போது மின்சாரம்வழங்கப்படாத போதிலும் அது தொடர்பான செலவுகளும், நீர் வழங்கலுக்கான செலவுகளும்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

## உதவி வழங்கப்பட்டது

(தொல்புரம்)

சங்கரத்தை குளிப்பொன் வீதியிலுள்ள வீடு ஒன்றின் மண்சுவர் இடிந்து வீழ்ந்ததில் கடந்த வாரமளவில் பலியான ம. கணபதிப்பிள்ளை (73) அவரது மகளான தே இராசேஸ்வரி (47) ஆகிய இருவரின் மரணச் செலவிற்காக 4000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

சங்கரத்தை கிராமசேவை உத்தியோகத்தர் திரு. வ. விஜயவேல் அவர்கள் எடுத்த துரித முயற்சியினால் சங்கானை உதவி அரச அதிபர் பணிமனை வழங்கியுள்ளது. (41)

## பொருளாதார தடையை நீக்க சீனா பாகிஸ்தான் கூட்டாக கோரிக்கை

(பீக்கிங்)

சீனாவின் மீதும், பாகிஸ்தான் மீதும் அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட வேண்டுமென சீனப் பிரதமர் லீ. பெங்கும், பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனாசீர் பூட்டோவும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனாசீர் பூட்டோ பீகிங் சென்றிருப்பதையடுத்து சீனாவும் பாகிஸ்தானும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் இரு தரப்பு பேச்சுக்களை விரிவான முறையில் நடத்தியுள்ளன. ஆயுத விற்பனை, சீனாவின் உதவியோடு பாகிஸ்தானின் அணு ஆராய்ச்சி, போன்ற விடயங்கள் தொடர்பாகவும். காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவுடன் பாகிஸ்தானின் முரண்பாடு பற்றியும், விரிவாக ஆராயப்பட்டுள்ளது. எனினும் காஷ்மீர் விவகாரத்தில் தலையிட சீனா விரும்பவில்லை எனவும், இவ் விவகாரத்தை இந்தியாவும், பாகிஸ்தானும் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டுமெனவும், சீனப் பிரதமர் லீ பெங் கூறியுள்ளார்.

இந்தப் பேச்சுக்களின் போது இருதரப்பு ஒத்துழைப்பு பற்றியும் ஆராயப்பட்டிருக்கிறது. இதில் இராணுவ ஒத்துழைப்பு பரிவர்த்தனையும் அடங்கும்.

## சீனா, பாகிஸ்தான் மீதான பொருளாதாரத் தடை தொடருமென அறிவிப்பு

(வாசிங்டன்)

சீனாவும்,பாகிஸ்தானும் தங்கள் நாடுகள் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை நீக்குமாறு கோரி விடுத்த கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்துவிட்டது.

இது விடயத்தில் அமெரிக்காவின் நிலையில் எந்தவொரு மாற்றமும் இல்லை எனவும், வாசிங்டனில், வெளியுறவு இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், இந்த நாடுகளுடன்பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தமது நாடு தயாராகவே இருப்பதாகவும் தெரிவித்தார்.

## கெய்ரோ பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் நீடிக்கும்

### இஸ்ரேல் - பாலஸ்தீன் அறிவிப்பு

காஸாப்பகுதியிலிருந்துஇஸ்ரேலிய துருப்புக்களை மீளப் பெறுதல்மற்றும்மேற்குக்கரை தொடக்கம்ஜெரிக்கோ நகரப் பகுதியை எல்லையிடுதல்போன்ற முக்கிய விவகாரங்களில் இணக்கம் எதுவும் இன்னமும் காணப்படாத போதும் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெறுவதாக கூறப்படுகின்றது கெய்ரோவில் இஸ்ரேலிய அரசுக்கும், பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்குமிடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகள் குறித்து தெரிவித்த பாலஸ்தீனிய விடுதலை இயக்கப் பிரதிநிதி முகம்மத் அபாஸ் மேலும் கூறுகையில், பேச்சுக்கள் தொடர்ந்து நடத்தப்படும் எனத் தெரிவித்தார். இஸ்ரேலிய அரசின்செய்திக் குறிப்பு ஒன்றிலும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 30 பேர் பலி

பிலிப்பைன்சின் மத்திய பகுதியில் கடந்த ஞாயிறன்று வீசிய கடும் புயற் காற்றினால் முப்பது பேர் வரை உயிரிழந்து இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த மாதத்தில் மட்டும் பிலிப்பைன்சில் வீசிய மூன்றாவது புயல் இது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த புயலினால் ஐம்பது லட்சத்திற்கும் அதிகமானோர் இடம் பெயர்ந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## கப்பல்கள் மூழ்கின

போர்னியோவிற்கு அப்பாலுள்ள இந்தோனேசியக் கடற் பிராந்தியத்தில் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து ஆறு கப்பல்கள் மூழ்கிப் போயுள்ளன. அதிலிருந்த 22 பேர் காணாமற் போயுள்ளனர். கடந்த நான்கு தினங்களில் மேலும் இரு மீன்பிடி வள்ளங்கள் மற்றும் இரு சிறிய படகுகள் என்பனவும் இப்பகுதியில் காணாமற்போயிருப்பதாக தெரியவருகின்றது.

## அரசாங்க தொழிலகங்கள் பாகிஸ்தானில் தனியார்மயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் அரசாங்கத் தொழிலகங்கள் பல தனியார் மயமாக்கப்படவுள்ளது அடுத்த இரண்டு மாதங்களில் இது நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றபோதும் எந்த வகையான தொழிலகங்கள் தனியார் மயமாக்கப்படும் என்பது பற்றி தெளிவாக அறிவிக்கப்படவில்லை.

முன்னாள் பிரதமர்நவாப் ஷெரிப்பின் ஆட்சிக் காலத்தின் போது 65 கம்பனிகள் தனியார் மயமாக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## வாந்திபேதி நோயினால் 418பேர் பீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனைக்கு உட்பட்ட யாழ். குடாநாட்டிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் இதுவரை கொலரா நோய்க்கிலக்கானவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 953பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது இவர்களுள் 418பேர் கொலரா நோயினால் பீடிக்கப்பட்டிருந்தது தெரியவந்ததை அடுத்து அவர்களுக்கு மேலதிக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை யாழ் போதனா மருத்துவ மனையில் மட்டும் 14 பேர் இந்நோயினால் மரணமடைந்துள்ளார்கள்.

மேற்படி நோய்க்கு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவில் 377 பேர் நோய்க்கிலக்கானவர்களென்ற சந்தேகத்தின் பேரில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது இவர்களுள் 137பேர் நோய்க்கிலக்காகியிருந்தார்கள். கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 137, நோயால் பீடிக்கப்பட்டவர்கள் 51, மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 242, நோயால் பீடிக்கப்பட்டவர்கள் 99, இவ்வாரம் மட்டும் 22 பேர் இந்நோய்க்கு இலக்காகியுள்ளார்கள். சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 118, நோயால் பீடிக்கப்பட்டவர்கள் 32, தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 71, பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் எவரும் இந்நோய்க்கிலக்காகவில்லையென தெரிவிக்கப்பட்டது ஆனால் யாழ். போதனா மருத்துவமனையின் அறிக்கையின்படி பருத்தித்துறையில் இருந்து வந்து யாழ்.போதனா மருத்துவ மனையில் 4பேர் கொலரா நோய்க்கிலக்கானவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சிகிச்சை பெற்றுள்ளனர் எனவும் இவர்களுள் ஒருவர் மரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## தெருக்கூத்து

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்த மக்கள் வாழும் முகாம்களில் வாந்திபேதி நோய் வராமல் தடுக்க சுகாதாரமாக வாழும் வழிமுறைகளை விளக்கி தெருக்கூத்துக்கள் நடத்தப்பட்டுவருகின்றன

மானிப்பாய் வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த நவாலி, சுதுமலை, ஆனைக்கோட்டை போன்ற இடங்களில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம் பகுதிகளிலும் சனசமூக நிலையங்கள் போன்ற பொதுமக்கள் கூடும் பகுதிகளிலும் இத்தெருக்கூத்துக்கள் நடாத்தப்படுகின்றன. (41)

## ஒளி விழா

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பயிற்சி நெறி மாணவர்கள் நடாத்தும் ''ஒளி விழா'' இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது. முன்னைய பேராயர் பேரருள் டி. ஜே. அம்பலவாணர், திருமதி வைத்திய கலாநிதி சந்திர அம்பலவாணர் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவருகைதரவுள்ளார்கள். கலை நிகழ்ச்சிகள் மாணவர்களால் நடாத்தப்படவுள்ளது.

## 18 தினங்களில் 621.4 மி.மீ. மழை

கடந்த 10 ஆம் திகதி முதல் நேற்று வரையிலான 18தினங்களில் யாழ். குடாநாட்டில் 621 4 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது என கணிப்பிடப்பட்டுள்ளது. 18 தினங்களில் சராசரி மழை வீழ்ச்சி 34 மில்லி மீற்றர். பல ஆண்டுகளின்பின் குடாநாட்டில் இவ் உயர்ந்தளவு மழை வீழ்ச்சி பெறப்பட்டுள்ளதாகவிவசாய ஆராய்ச்சி நிலைய தரவுகள் தெரிவிக்கின்றன.

# தொடரும் அடைமழையினால் பாதிப்பு முகாம்களில் உள்ளோர் அவதி

(தென்மராட்சி)

தொடர்ந்து பெய்துவரும் மழையினால் தென்மராட்சி பகுதியில் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இயல்பு வாழ்க்கை சீர்கெட்டிருப்பதாகவும் பல வீடுகள் நாசமடைந்திருப்பதாகவும் எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் தொடர்ந்து பெய்துவரும் மழையினால், புலோப்பளையை அண்டிய பகுதிகளில் நேற்று ஐம்பதிற்கும் மேற்பட்ட குடிசைகள் இடிந்து நாசமாகியுள்ளன. இதனால் அப்பகுதி மக்கள் கிறிஸ்தவ தேவாலயத்திலும் பளைமகா வித்தியாலயத்திலும் தங்கியுள்ளனர்.

வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதனால் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் இடைவிடாது பெய்துவரும் மழையினால்பேராளை பகுதி மக்களும், தம்பகாமம் பகுதி மக்களும் பேராளை அ. த,க. பாடசாலையில் தங்கியுள்ளனர். பளை மகாவித்தியாலயத்திலும் 50க்கு மேற்பட்ட மக்கள் தங்கியுள்ளனர்.

இதே வேளை, பண்டிதர் குடியிருப்பைச் சேர்ந்த மக்கள் மழை வெள்ளம் காரணமாக பகலில் பண்டிதர் குடியிருப்பு பாடசாலையிலும் பின்னர் இரவு வேளைகளில் கெற்பேலி, விடத்தற்பளை பாடசாலைகள், ஆலயங்கள் ஆகியவற்றில் தங்குகின்றனர்

மேலும், கச்சாய், பலாவி வடக்கில் உள்ள முப்பதற்கு மேற்பட்ட குடும்பங்கள் கச்சாய் மகாவித்தியாலயத்திலும் கொடிகாமம் பகுதி மக்கள் கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்திலும். நாவற்காடு அ, த க. பாடசாலையிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

மிருசுவில் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் வடக்கு மிருசுவில் பாடசாலையிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

இடம்பெயர்ந்தோர் முகாம்களில்இருந்து கோவில்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்திருந்த மக்கள் மீளவும் தமது இருப்பிடங்களுக்குச் சென்று தமது குடிசைகளை செப்பனிட்டுக்கொண்டிருந்த வேளையில் நேற்றும், நேற்று முன்தினமும் பெய்த அடைமழையினால் மீளவும் அவர்கள் ஆலயங்கள், பாடசாலைகளில் சென்று தங்கியிருக்க வேண்டிய அவலநிலை நவாலிப்பகுதியில் இடம்பெயர்ந்து தங்கியிருக்கும் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தம்பாட்டி மற்றும் தீவுப்புறங்களில் இருந்து இடம் பெயர்ந்த சுமார் 45க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இவ்வாறு பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. இதேவேளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் தம்பாட்டிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து மயூரன் குடியிருப்பில் தங்கியிருக்கும் நாற்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இலவசமாக புற்பாய்களை வழங்கியுள்ளமையும்குறிப்பிடத்தக்கது.(7)

## பெரும் மழையினால் மன்னார்தீவில் பாதிப்பு

(மன்னார்)

மன்னாரில் தொடரும் மழையினால் மன்னார் தீவும் பாதிக்கப்பட்டுள்ளது· பேசாலையில் 60 வீதமானோர் வீடுகளை விட்டு வெளியேற முடியாவண்ணம் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

பேசாலை அகதிமுகாமினுள் வெள்ளம் புகுந்ததால் அகதிகள் அங்கிருந்து இடம் பெயர்ந்துள்ளனர். வெள்ளம் புகுந்ததால் ஏற்பட்ட குளிரினால் பேசாலை அகதிமுகாமில் குழந்தைஒன்றுஇறந்தது.

பேசாலை கிராமத்திலிருந்து வெள்ளம் கடலுக்கு வடியும் வாய்க்காலில் இராணுவ முகாம் ஒன்று உள்ளது. இதனால் வாய்க்காலை திறந்துவிட இராணுவத்தின்அனுமதி தேவையாக உள்ளது. பேசாலை வைத்தியசாலையும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

பெரிய நீர்த்தேக்கமான கட்டுக்கரை குளம் உடைப்பெடுக்கும் அபாயம் இருப்பதால் மடு அகதிமுகாமில் உள்ள பலர் மடு ஆலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

## பருத்தித்துறையில் வீதி விளக்குகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபை வீதி விளக்குகள் அமைத்து நகரத்தில் இரவு வேளைகளில் வீதி வெளிச்சங்களை ஏற்படுத்தும்நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது இதன் முதற்கட்டமாக நகரின் முக்கிய சந்திகளில் பரீட்சார்த்தமாக பத்து வீதி விளக்குகளை அமைக்கும் நடவடிக்கைகளை பருத்தித்துறை நகரசபை ஆரம்பித்துள்ளது. பருத்தித்துறை நகரசபைச்செயலாளர் திரு. க. சண்முகநாதனின் நடவடிக்கைகளை அடுத்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இப் பரீட்சார்த்த வீதி விளக்குகள்

## முல்லைத்தீவு மாவட்டத்தில் 30 குளங்கள் உடைப்பெடுப்பு

தொடரும் மழையினால் முல்லைத்தீவில் 30 குளங்கள் உடைப்பெடுத்துள்ளன. இங்கு மட்டும் வெள்ளத்தினால் 13 ஆயிரத்திற்கும் மேலான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

உடையார்கட்டுக்குளம், மதுரங்குளம் உட்பட மூன்று பெரிய குளங்களும் உடைப்பெடுத்துள்ளன. 1362 வீடுகள் இம்மாவட்டத்தில் முற்றாக சேதமடைந்துள்ளன. 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் பலியாகியுள்ளன.

இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கு

## தற்போதைய பாடசாலைக்கு நிரந்தர இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இரா... சாலைகளிலேயே நிரந்தரமாக கல்வி கற்பிக்க அனுமதி

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காரைநகர் வலந்தலைப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் நேற்று முன்தினம்இரவு 8.40 மணியளவில் மூளாய், பொன்னாலை மக்கள் குடியிருப்புக்களை நோக்கி எறிகணை வீச்சினை மேற்கொண்டனர்.

இவ் எறிகணைகள் மக்கள் குடியிருப்புக்களுக்கு சமீபமாக வீழ்ந்து வெடித்தபோதிலும் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என தெரியவருகிறது. (41)

## அறிவியல் அரங்கு

(யாழ்ப்பாணம்)

சமூக அறிவியல் ஏடு ''நங்கூரம்'' மாத இதழ் நேற்று ''விடுமுறைக்கால அறிவியல் அரங்கு'' ஒன்றை யாழ். இந்துக் கல்லூரி குமார சுவாமி மண்டபத்தில் நடாத்தியது.

நேற்றுக் காலை 8.30மணி தொடக்கம் 12.30 மணி வரை நடைபெற்ற காலை நிகழ்விற்கு திரு. இரா. சிவச்சந்திரன் அவர்கள் தலைமை வகித்து நிகழ்ச்சிகளை நடாத்தினார்.

மாலை நிகழ்வு 1 30 மணி தொடக்கம் 5.00 மணிவரை நடைபெற்றது. இந் நிகழ்விற்கு இ. மகேந்திரன் தலைமை தாங்கினார் தொடர்ந்து விரிவுரைகள் நடைபெற்றன. அடுத்து கருத்துப் பரிமாற்றத்தைத் தொடர்ந்து நிறைவுரையை விடுதலைப் புலிகளைச் சேர்ந்த திரு. வே. பாலகுமார் அவர்கள் நிகழ்த்தினார். (பா),(சி)

## தொழிற்பயிற்சி

சுயதொழில் முயற்சியினை ஊக்குவிக்கு முகமாக இலவச தொழில் பயிற்சிநெறி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி இலவசவகுப்புகள் தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாணபேராலய பெண்கள் ஒன்றியத்தினரால் மானிப்பாயிலுள்ள மேற்படி ஒன்றியத்தின்தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் தை மாதம் முதல் ஆரம்பமாக உள்ளதெனவும், சமையற்கலை, கைப்பணிப்பயிற்சி, தையல்கலைப் பயிற்சி என்பனவும் மேலும் பல்வேறு பயிற்சிநெறிகளும் நடைபெறவுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)

## காணவில்லை

புங்குடுதீவு – நயினாதீவு ப. நோ கூ. சங்கம்

## கூட்டுறவு விதிக்கு அமைய பொதுச்சபை தெரிவுஇல்லை

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கத்தில் 19 ஆம், 20ஆம்கிளைகளிலிருந்து பொதுச்சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட கிளைக்குழு உறுப்பினர்கள் அக் கிளைக்குழுவில் அங்கம்வகிக்கத்தகுதியுடையவர்கள் அல்ல என கூட்டுறவு விடயம்அறிந்தவட்டாரங்கள் கூறுகின்றன.

கடந்த 23ஆம் திகதி யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் நடாத்திய தேர்தல் மூலம் இவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். கூட்டுறவுவிதிகளுக்கு இணங்க இவர்கள் மேற்படி கிளைகளில் அங்கம் வகிக்க தகுதி உடையவர்கள் அல்ல என தெரிவிக்கப்படுகிறது. மேற்படி உறுப்பினர்கள் இக்கூட்டுறவு கிளைகளில் பங்கீட்டு அட்டைகளையோ அல்லது பங்கீட்டு புத்தகங்களையோ இணைக்காதவர்கள் என தெரிவிக்கப்படுகிறது

## தமிழ்விழா

(யாழ்ப்பாணம்)

மாற்றம் சஞ்சிகையால் நடாத்தப்படும் தமிழ்விழா வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. விழாவில் ஆ. சி. முருகுப்பிள்ளை அவர்களுக்குத் தேசாபிமானி விருதும், 5000 ரூபா பெறுமதியான பரிசும் வழங்கப்படவுள்ளது.

## வடமராட்சி கிழக்கு கோட்ட அலுவலகம் திறப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சிகிழக்கு கல்விக் கோட்டத்திற்கான அலுவலகம் வெ[illegible]விரைவில் திறக்கப்படுமென கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. கரவெட்டி கல்விக் கோட்டத்திற்கான அலுவலகம் நெல்லியடியில் திறக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. பருத்தித்துறை கல்விக் கோட்டத்திற்கான அலுவலகம் முன்னர் வடமராடசிக் கல்விக் கோட்டம் இயங்கிய வேலாயுதம் மகாவித்தியாலய இராமச்சந்திரன் மண்டபக் கட்டடத்திலேயே இயங்கிவருகின்றது. முன்பு வடமராட்சிக் கல்விக் கோட்டமென இயங்கி வந்த கல்விக் கோட்டமே நிர்வாக பரவலாக்கல் திட்டத்தின் கீழ் மூன்றாகப் பிரிக்கப்பட்டு தற்போது வடமராட்சி

கூட்டுறவு விடயம் அறிந்தவட்டாரங்கள் கூறுகின்றன.

கடந்த 23ஆம் திகதி யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் நடாத்திய

அட்டைகளையோ அல்லது பங்கீட்டு புத்தகங்களையோ இணைக்காதவர்கள் என தெரிவிக்கப்படுகிறது

உயர்ந்தளவு மழை வீழ்ச்சி பெறப்பட்டுள்ளதாகவிவசாய ஆராய்ச்சி நிலைய தரவுகள் தெரிவிக்கின்றன.

தஞ்சமடைந்துள்ளனர்.

மையும்குறிப்பிடத்தக்கது.(7)

சுயதொழில் முயற்சியினை ஊக்குவிக்கு முகமாக இலவச தொழில் பயிற்சிநெறி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி இலவசவகுப்புகள் தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாணபேராலய பெண்கள் ஒன்றியத்தினரால் மானிப்பாயிலுள்ள மேற்படி ஒன்றியத்தின்தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் தை மாதம் முதல் ஆரம்பமாக உள்ளதெனவும, சமையற் கலை, கைப்பணிப்பயிற்சி, தையல்கலைப் பயிற்சி என்பனவும் மேலும் பல்வேறு பயிற்சிநெறிகளும் நடைபெறவுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)

## தமிழ்விழா

(யாழ்ப்பாணம்)

மாற்றம் சஞ்சிகையால் நடாத்தப்படும் தமிழ்விழா வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. விழாவில் ஆ. சி. முருகுப்பிள்ளை அவர்களுக்குத் தேசாபிமானி விருதும், 5000 ரூபா பெறுமதியான பரிசும் வழங்கப்படவுள்ளது.

# வடமராட்சி கிழக்கு கோட்ட அலுவலகம் திறப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சிகிழக்கு கல்விக் கோட்டத்திற்கான அலுவலகம் [illegible] விரைவில் திறக்கப்படுமென கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. கரவெட்டி கல்விக் கோட்டத்திற்கான அலுவலகம் நெல்லியடியில் திறக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. பருத்தித்துறை கல்விக் கோட்டத்திற்கான அலுவலகம் முன்னர் வடமராடசிக் கல்விக் கோட்டம் இயங்கிய வேலாயுதம் மகாவித்தியாலய இராமச்சந்திரன் மண்டபக் கட்டடத்திலேயே இயங்கி வருகின்றது. முன்பு வடமராட்சிக் கல்விக் கோட்டமென இயங்கி வந்த கல்விக் கோட்டமே நிர்வாக பரவலாக்கல் திட்டத்தின் கீழ் மூன்றாகப் பிரிக்கப்பட்டு தற்போது வடமராட்சி கிழக்கு, கரவெட்டி, பருத்தித்துறை கல்விக்கோட்டங்கள் என இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. (25)

## பருத்தித்துறையில் வீதி விளக்குகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபை வீதி விளக்குகள் அமைத்து நகரத்தில் இரவு வேளைகளில் வீதி வெளிச்சங்களை ஏற்படுத்தும்நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது இதன் முதற் கட்டமாக நகரின் முக்கிய சந்திகளில் பரீட்சார்த்தமாக பத்து வீதி விளக்குகளை அமைக்கும் நடவடிக்கைகளை பருத்தித்துறை நகரசபை ஆரம்பித்துள்ளது. பருத்தித்துறை நகரசபைச்செயலாளர் திரு. க. சண்முகநாதனின் நடவடிக்கைகளை அடுத்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இப் பரீட்சார்த்த வீதி விளக்குகள் அமைக்கும் திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் நகரின் வேறுபகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 30 குளங்கள் உடைப்பெடுப்பு

தொடரும் மழையினால் முல்லைத்தீவில் 30 குளங்கள் உடைப்பெடுத்துள்ளன. இங்கு மட்டும் வெள்ளத்தினால் 13 ஆயிரத்திற்கும் மேலான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

உடையார்கட்டுக் குளம், மதுரங்குளம் உட்பட மூன்று பெரிய குளங்களும் உடைப்பெடுத்துள்ளன. 1362 வீடுகள் இம்மாவட்டத்தில் முற்றாக சேதமடைந்துள்ளன. 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் பலியாகியுள்ளன.

இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கு

# தற்போதைய பாடசாலைக்கு நிரந்தர இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து தற்காலிகமாக யாழ். மாவட்டத்திலுள்ள வேறு பாடசாலைகளில் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கு தற்போது கல்வி கற்பிக்கும் பாடசாலைகளிலேயே நிரந்தரமாக கல்வி கற்பிக்க அனுமதி வழங்க இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தெற்கு வலயத்தைச் சேர்ந்த சுமார் 38 ஆசிரியர்களுக்கு இவ்வாறு அனுமதி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## காணவில்லை



கந்தையா சதீஸ்குமார்
(குமரன்)

நவாலி அரசடிச் சந்தியில் அமைந்துள்ள வரதன் சைக்கிள் வேலைத்தளத்தில் (VARATHAN CYCLE WORKS) வேலை செய்து வந்த கந்தையா சதீஸ்குமார்(குமரன்-17) என்பவர் கடந்த வெள்ளிக்கிழமைமுதல் ஏசியா சைக்கிள் (007AB2940) ஒன்றுடன் காணாமல் போய்விட்டார். இவர் கடைசியாக கறுப்புநிற ரீசேட்டும், நீலநிற அரைக்காற்சட்டையும் அணிந்துள்ளார். இவரது உயரம் ஏறக்குறைய நாலரை அடி. இவர் பற்றிய தகவல்களை அறிந்தவர் நவாலி அரசடியில் அமைந்துள்ள வரதன் சைக்கிள் வேலைத்தளத்துடன் தொடர்பு கொள்ளவும். தகவல் கொடுப்பவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தகவல்

து.வரதன்
(வரதன் சைக்கிள் வேலைத்தளம்)
நவாலி வடக்கு,
அரசடி.

(சி-8243)


பேக்கரி உரிமையாளர்களுக்கு

## அன்பான வேண்டுகோள்

களஞ்சியத்திலிருந்து எமது சங்கத்திற்கு வழங்கப்படும் மாவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால், மக்கள் நலன்கருதி தங்களுக்கு விநியோகிக்கப்படும் முழு மாவினையும் பாண் உற்பத்திற்கு மாத்திரமே பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஸ்பெசல்பாண், பட்டர்பாண், பணிஸ், கேக்வகைகள், (அடைகேக் உட்பட) கல்பணிஸ் மற்றும் இதுபோன்ற ஆடம்பர உணவுப் பொருட்களின் உற்பத்தியை நாளை 31-12-93 வெள்ளிக்கிழமையிலிருந்து மறு அறிவித்தல் வரை நிறுத்தி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

எக்காரணம் கொண்டும் பாணின் நிர்ணயிக்கப்பட்ட நிறை, விலை ஆகியவற்றில் மாற்றம் செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.

183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தலைவர்
யாழ். மாவட்ட பேக்கரி
உரிமையாளர் சங்கம்.

(சி-8247)


# கிளிநொச்சி மாவட்டத்திற்கு சுகாதாரப் பணிமனை

(நமது நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்திற்கென தனியானதோர் சுகாதார சேவைகள் பிராந்திய பணிமனை வரும் முதலாம் திகதி தொடக்கம் இயங்கவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் இதுவரை யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அதிகாரத்தின் கீழ் இருந்துவந்தது குறிப்பிடத்தக்கது. இதேவேளை இப்புதிய பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளராக யார் நியமிக்கப்படுவார் என்பது தெரியவில்லை. இதேவேளை பளைப்பகுதி கிளிநொச்சி பிராந்திய பணிமனையின் கீழ் இருக்கின்ற போதும் அது யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கீழேயே தொழிற்பட உள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# புத்தளம் கடற்பகுதியில் டீசல், ஒயில் பறிப்பு

(கொழும்பு)

புத்தளம் பகுதியில் படகுகளில் எடுத்துவரப்பட்ட பொருள்களில், வடபகுதிக்குத் தடைசெய்யப்பட்ட பொருள்களை மட்டும் இனம் தெரியாதோர் பறித்துச் சென்றுவிட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

கற்பிட்டிக்கும், திபிரிகெசியவுக்கும் இடையில் இச் சம்பவம் இடம்பெற்றதாக சிறிலங்கா பொலிசாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த திங்கள், செவ்வாய் கிழமைகளில் இக் கடற்பகுதியில் பொதுமக்களின் 11படகுகள் வழிமறிக்கப்பட்டு 60 பரல் டீசல், 10 பரல் ஒயில், 40 கிலோ கிறீஸ், 200 பற்றிகள் என்பன பறித்தெடுக்கப்பட்டதாகவும், அப்படகிலிருந்த ஏனைய பொருள்கள் விட்டுச்செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் படகுகளோ, அதிலிருந்தவர்களோ கடத்திச் செல்லப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## கோபாலசாமியை

பொதுச்செயலர் பதவிவழங்க பொதுக்குழு சம்மதம் அளித்துள்ளது.

முன்னொருபோதுமில்லாத அளவு இம்முறை தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்திற்கு பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கான கட்சி தொண்டர்கள் பொதுக்குழுக் கூட்டத்தை காண தஞ்சாவூரில் திரண்டிருந்தனர். தஞ்சாவூர் நகரம் முழுவதும் இப்பொதுக்குழுக் கூட்டத்தையொட்டி மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

## புலிகளை

இன்று புலிகள் தாக்குதலுக்கு மேல் தாக்குதல்நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். யுத்தத்தினால் அரசாங்கம் தடுமாறுகிறது. இன்று அரசாங்கம் உண்மையை உணர்ந்திருக்கும் ஆனால் காலம் தாழ்த்தி உண்மை உணர்ந்தது வருந்தத்தக்கது என மேலும் அவர் கூறினார்.

## சுகாதார

முதலில் குருநகரிலும் அம்பனிலும் இந்த மலேரியா தடுப்பியக்க பணிமனைகள் இயங்க உள்ளன. இதில் குருநகரில் நேற்றுமுதல் இயங்கத் தொடங்கிவிட்டதாக தெரிவிக்கப்பட்டது (சி)

## அடுத்த

மேற்படி இராணுவ சிப்பாய் ''யாழ்ப்பாணம் பலாலி இராணுவ முகாமிலிருந்து நான் இன்று காலை இந்த நீதிமன்றத்துக்கு வந்தேன். நான் இந்த முகாமில் கடமையாற்றுகிறேன். எனது பக்கம் சாட்சியமளிக்கவிருக்கும் கப்டன் பெரேராவும், சரத்தும் யாழ். யுத்த முனையிலேயே இருப்பதால் உயிருடன் இருந்தால் மாத்திரமே எங்களால் வரமுடியும் என்பதை இப்போதே இங்கு கூறிவைக்க விரும்புகிறேன். சாட்சிகள் இருவருக்கும் இந் நீதி மன்றத்தால் அனுப்பப்பட்ட அழைப்பாணை கிடைக்கவில்லை அதனாலேயே அவர்கள் இன்று சமுகமளிக்கவில்லை'' என்றார்.

# மட்டக்களப்பு எம். பி. வீட்டிற்கு கிறனைட் வீச்சு

கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினரின் மட்டக்களப்பிலுள்ள வீட்டிற்கு நேற்றுமுன்தினம் இரவு கைக்குண்டு வீசப்பட்டுளளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்துள்ளன:

டெலோ அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் வீட்டிற்கே கைக்குண்டு வீசப்பட்டதாகவும் அந்த நேரம் அவர் வீட்டில் இருக்கவில்லையென்றும், வீடு சிறு சேதத்திற்கு உள்ளாகியதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

## காவி

டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி சோதனைகள் தனக்கு அறிவிக்கப்படாமலேயே மேற்கொள்ளப்படுவதாகவும், மத்திய அரசாங்கத்தின் அறிவுறுத்தலுக்கு அமையவே மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## குள

மூனாமடு, பாலாமைக்கல் பகுதி குளங்களுக்கு அருகில் உள்ள காவலரண்களினுள்ளேயே வெள்ளம்புகுந்துள்ளது.சில காவலரண்கள்முற்றாக மூழ்கியுள்ளன. இதனால் புதிய காவலரண்களை படையினர் வேறு இடங்களில் அமைத்து வருகின்றனர்.

## குண்டு

சிறுமியின் இருசகோதரர்கள் பலியானது தெரிந்ததே. இச் சம்பவத்தில் படுகாயமடைந்த மற்றொரு சகோதரன் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டுள்ளார்.


# இதய அஞ்சலி

28-12-93 இல் கைதடி, நாவற்குழியில் மரணமடைந்த

## திருமதி சபாநாதன் வசந்தாதேவி

(மாதர் சங்கத் தலைவி, கைதடி, நாவற்குழி)

அவர்களுக்கு

## எமது இதய அஞ்சலி

அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

426/1 கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.

கி. சிவகாமிசுந்தரி
தி. உலகநாதன்,
தையல்நாயகி, சம்பந்தர்
குடும்பம்.

(7082)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.